



கள்ளக்குறிச்சி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக்கழகங்களுக்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 14 ஆயிரம் பாக முகவர்கள் BLA2 & பூத் அளவிலான பொறுப்பாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.






மாணவ மாணவியரின் தனித்திறமையை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன் சார்ந்த பயிற்சிகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் கழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது தான் நான் முதல்வன் திட்டம். முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான நான் முதல்வனில் பயிற்சி பெற்ற மாணவ –மாணவியருடன் கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. பள்ளியில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தால் பயனடைந்த மாணவச்செல்வங்களின் கருத்துகளைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். தமிழ்நாட்டு மாணவர்கள் உலக அரங்கில் சாதிக்க "நான் முதல்வன் திட்டம் துணை நிற்கட்டும் என குறிப்பிட்டார். உடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# 7-வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ்ஷிப் - 2023 கோப்பை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை,ஜூலை.22-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் (20.07.2023) சென்னை, மெரினா கடற்கரை, கலங்கரை விளக்கம் (Marina light House) அருகில் 7ஆவது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப்2023 கோப்பை, “பொம்மன் இலச்சினை” (Bomman Mascot) அறிமுகம் மற்றும் “பாஸ்திபால்” (Pass the Ball) தொடக்க விழா நடைபெற்றது.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆசிய கோப்பையை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டும் செல்லும் வகையில் “Pass the Ball’ நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். மேலும் ஆசிய கோப்பை பொம்மன் இலச்சினையை (BommanMascot) அறிமுகப்படுத்தி விழாப் பேருரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மகேஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜான் எபினேசர், ஆர்.டி.சேகர், பி.சிவகுமார், என்.எழிலன், எம்.கே. மோகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜெ.கருணாநிதி, தா. வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, ஹாக்கி இந்தியா தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் திலிப்டார்க்கி, செயலாளர் போலோநாத்சிங், பொருளாளர் சேகர் மனோகரன் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஒலிம்பியன் பாஸ்கரன், கோவிந்தா மற்றும் முகமது ரியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய

# ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் மணிப்பூர் பயணம்!

## இன்று செல்கின்றனர்!

இம்பால், ஜூலை 22-

மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் இன்று மணிப்பூர் செல்கின்றனர்.

மணிப்பூரில் கடந்த 80 நாட்களுக்கும் மேலாக பயங்கர வன்முறை நீடித்து வருகிறது. மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் இருவர், நிர்வாணமாக்கப்பட்டு இழுத்துச் சென்ற கொடூரம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய “இந்தியா” கூட்டணித் தலைவர்கள் இன்று மணிப்பூர் பயணம் செய்ய உள்ளனர்.

குடியரசுத் தலைவரைச் சந்தித்து முறையிடவும் “இந்தியா” கூட்டணித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மணிப்பூர் கலவரம் குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் “இந்தியா” கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

